**தலைப்பு 286 – காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(ஆ) பந்தியில் அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 104(4) | நட்டம் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 04 வாகனங்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதில் தாமதம் 05 மாதங்களிலிருந்து 05 ஆண்டுகள் வரையானதாக இருந்ததுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது விபத்துக்குள்ளான 03 வாகனங்களின் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | நி.பி 104(4) இன் பிரகாரம் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது ஏனைய வெளி நிறுவனங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்ததன் காரணமாக தாமதமடைந்துள்ளது. முழுமையான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய விபத்துக்கள் தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையில் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இன்ஜின் தொடர்பான பிரதான பழுதுபார்த்தலுக்குப் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலாவதாக ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், 21 வாகனங்கள் தொடர்பான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதிஏற்பாடு போதியதாக இல்லாமை மற்றும் துரித உறுதி நிகழ்ச்சித்திட்டத்தின் காரணமாக எரிபொருளைப் பரீட்சிப்பதற்காக வாகனங்களை ஈடுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீடு இலக்கம் 20.02.01.03 இன் கீழ் மாகாணங்களுக் கிடையேயான விவசாய குடியேற்ற பிரதேசங்களிலுள்ள காணிகளின் குத்தகை வருமானத்தை சேகரிப்பது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 28,746,016 தொகையான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 175(2) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார விவகார சுற்றறிக்கையின் 4(ஆ) பந்தியின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் மற்றும் திரண்ட நிலுவை வருமானம் அதிகரித்துச் செல்வதனை கட்டுப் படுத்துவதற்காக உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலம் குத்தகைக்கு வழங்கும் நடைமுறையானது அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒரு சிக்கலான நடைமுறையாக இருப்பதனால் குத்தகைதாரர் களைத் தெரிவு செய்த திகதியிலிருந்து குத்தகை பத்திரத்தை வழங்கும் வரையான காலத்திற்காக நிலுவைக் குத்தகை உருவாகி குத்தகைதாரர் செலுத்த வேண்டிய குத்தகைப் பணம் அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது. நிலுவைக் குத்தகையை அறவிட்டு குத்தகை வருமானத்தை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தை வருங்காலங்களில் அமுல்படுத்துவதுடன் குத்தகை வருமானம் முறைப்படியாக அறவிடப்படுகின்றது. |
| (ஆ) | மாகாணங்களுக்குள்ளே விவசாய குடியிருப்பு பிரதேசங்களில் அரசாங்க காணிகளிலிருந்து சேகரிக்கப்பட வேண்டிய நிலுவைக் குத்தகை வருமானத்தில் 47 சதவீதமானது 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் 07 பிரதி காணி ஆணையாளர் | அரசாங்க காணிகளின் குத்தகை வருமானத்தை ஆக்கபூர்வமாகவும் முறைப்படியாகவும் சேகரித்தல் வேண்டும். | நிலுவைக் குத்தகையை அறவிட்டு குத்தகை வருமானத்தை வலுப்படுத்துவதற்கான வேலைத் திட்டம் எதிர்வரும் காலங்களில் அமுல்படுத்தப் படவுள்ளதுடன் அதற்கிணங்க குத்தகை வருமானத்தை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்திற்குரிய 15 பிரதேச செயலகங்களில் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது ரூபா 7,910,261 தொகையான நிலுவை வருமானம் அசைவற்றுக் காணப்பட்டது. | | |
| (இ) | மாகாணங்களுக்குள்ளே விவசாயக் குடியிருப்பு பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பிரதேசங்களில் குத்தகை வருமானத்தை சேகரித்தல் மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுவதுடன் அப்பிரதேசங்களில் அரசாங்க கணக்குகளை நிருகித்தல் மற்றும் நிருவகித்தல் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்கின்ற முழுமையான அதிகாரம் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையின் பிரகாரம் காணி ஆணையாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. எவ்வாறாயினும், குத்தகைப் பணத்தை அறவீடு செய்தலை மேற்பார்வை செய்யும் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,913,074,419 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின்91 ஆம் பிரிவு, 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய SP/RD/02/10 ஆம் இலக்க அரசாங்க காணிகள் முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதி அலுவலக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானங்களை அறவீடு செய்வதற்கு மற்றும் அறவீடு செய்யவுள்ள நிலுவை வருமானங்களை சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குத்தகைக்கு வழங்கும் நடைமுறையின் சிக்கலின் காரணமாக அதிகளவான குத்தகைப் பணமும் தண்டப பணமும் ஒன்று சேர்ந்து உள்ளது. குத்தகை நிவாரணம் வழங்குவதினூடாக குத்தகையை சேகரித்தலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| செலவு விடய இலக்கம் 286-02-01-1409 (ஏனைய சேவைகள்) இற்கான ரூபா 50,000,000 தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 1,502,000 பணம் செலவு விடயங்களுக்குரிய செலவுகள் தொடர்பான சரியான மதிப்பீட்டின்றி நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்காக மாற்றியதன் காரணமாக ஆண்டின் இறுதியில் சேமிப்பான ரூபா 2,406,124 இனை மிகைத்த பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 1,172,554 ஆக இருந்தது. | முறையாக பாதீட்டு முகாமைத்துவம் மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | பொதுத் திறைசேரியினால் கட்டுநிதி விடுவித்தல் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதனால் அத்தியாவசதியமான செலவுகளை மேற்கொள்வதற்காக நிதிஏற்பாடு மாற்றப்பட்டுள்ளது. |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் அளவினை மிகைத்து செலவு அல்லது கடப்பாடு ஏற்படுத்தாதிருக்க வேண்டிய போதிலும் 06 செலவு விடயங்களுக்காக நிதிஏற்பாட்டினை மிகைத்து ரூபா 1,900,682 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் அளவினை மிகைத்து செலவு அல்லது பொறுப்பு ஏற்படுத்தாதிருத்தல் வேண்டும். | திணைக்களத்தின் நடவடிக்கைகளைப் பேணுவதற்காக அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய விடயங்களின் காரணமாக கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ளது எனவும் எதிர்காலத்தில் நிதிஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம் திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் செலவாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படாதிருக்க வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் காட்டப்படாதிருந்த ரூபா 684,103 தொகையான பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ரூபா 654,342 தொகையான பொறுப்புக்கள் தவறுதலாக உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை எனவும் பொறுப்புக்கள் ஊகிக்கப்பட்டு பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கும் போது ரூபா 29,761 குறைந்து பதிவு செய்யப்பட்டது. |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் கீழுள்ள 03 பொது வைப்புக் கணக்குகளின் 2019 திசெம்பர் 31இல் உள்ளவாறான மீதிகளின் மொத்த தொகை ரூபா 68,156,632 ஆகும். அதனுள் காணப்படுகின்ற 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 66,460,406 மொத்த தொகையான 48 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மிஹிகத மெதுர கட்டிடத்தை நிர்மாணிப்பதற்குரிய படித்து வைத்தல் பணத்திலிருந்து கட்டிடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு அவசியமாக இருப்பதனால் பிடித்து வைத்தல் பணம் விடுவிக்கப்படவில்லை. |

**2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) சேவையை கைவிட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர் களிடமிருந்து ரூபா 157,894 மொத்த தொகையான இடர் கடன்கள் மற்றும் விழா முற்பணங்கள் 03 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் வரையான கால வீச்சுடையதாக இருந்ததுடன் அக்கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவின் பிரகாரம் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணத்தை உடனடியாகத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து உத்தியோகத்தர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் பதில வழங்கப்படவில்லை. பிரதேச செயலாளர்களிடமிருந்து இந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமான தகவல்கள் விசாரிக்கப்பட்டுள்ளன என நான் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) வேலைகளிலிருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்ட 05 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 406,509 தொகையான நிலுவைக் கடன் மீதிகள் 05 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக முன்கொண்டு வரப்பட்டிருந்தன. | தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரசாங்கத்தினால் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தவணை ரீதியாகவேனும் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர் களுக்குத் தெரிவிக்குமாறு மாகாணத்திற்கு உட்பட்ட காணி ஆணையாளர் நாயகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தூரநோக்கும் செயற்பணியும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| ‘‘அரசாங்க காணிகளை முகாமைத்துவத்தின் முன்னுரிமையாக தெளிவான காணிக்கு உரிமையுள்ள ஒரு சமூகத்தை உருவாக்குதல்’’ என்ற தூரநோக்கு மற்றும் ‘‘தேசிய கொள்கைக்குள் சிறந்த ஒருங்கிணைப்புடனான அபிவிருத்தியினை தொடர்தல் என்பதனை உறுதிப்படுத்தி அரசாங்கத்தின் காணிகளை சிறப்பான மட்டத்தில் பயன்படுத்துவதற்கு வழிகாட்டி தெளிவான ஒரு காணியின் உரிமையை உறுதிப்படுத்துகின்ற முறையான முகாமைத்துவத்தினைப் பேணுதல்’’ திணைக்களத்தின் செயற்பணியாகும். இச்செயற்பணியிலிருந்து அடைந்து கொள்வதற்கு திணைக்களத்தின் முகாமைத்துவத்திற்குரிய காணிகளின் அளவு மற்றும் அவற்றில் நீக்கப்பட்டுள்ள காணிகளின் அளவை சரியாக இனங்கண்டு பதிவேட்டினைத் தயாரித்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமான அனுமதியற்ற குடியிருப்பாளர்களை இனங்காண்பதற்கும் அது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் முடியாதிருந்தது. | திணைக்களத்தின் தூரநோக்கு மற்றும் செயற்பணியின் அடிப்படையிலான முகாமைத்துவத் தினைப் பேணுவதற்காக திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காணிகளின் அளவு அவற்றில் நீக்கப்பட்ட அளவு, அனுமதியற்ற பாவனையில் காணப்படுகின்ற காணிகள் என்பன தொடர்பான சரியான தகவல்களைப் பேணுதல் வேண்டும். | 1897 வெற்றுக் காணிகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆவணங்களால் உறுதிப்படுத்துவதற்கு முடியாத அனைத்து காணிகளும் அரசாங்கத்தின் காணிகளாகக் கருதப்பட்டுள்ளது. அதன் பின்னர் 1935 இன் 19 ஆம் இலக்க காணிகள் அபிவிருத்தி கட்டளைச் சட்டம், 1972 இன் 1 ஆம் இலக்க காணிகள் மறுசீரமைப்பு அதிகாரச் சட்டம் முதலிய அதிகாரச்சட்டங்களின் மூலம் கடமை நடவடிக்கைகள் செய்யப்பட்டிருந்தும் அனைத்து அரசாங்க காணிகளையும் அளத்தல் இடம்பெற்றிருக்காததுடன் அதற்குரிய தரவு முறைமை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தினால் காணிகளின் பொறுப்பாண்மை பிரதேச செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் நீக்கப்பட்ட அரசாங்க காணிகளின் தகவல்களின் பொழிப்பு திணைக்களத்திடம் காணப்படுகின்றது. |

## 3.2 எதிர்பார்த்த பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் காணிகள் தொடர்பான தரவு முறைமையைத் தயாரிப்பதற்காக ரூபா 129,984,715 செலவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டது 1,180,632 காணி ஆவணங்களின் தகவல்கள் மாத்திரமாகும். 2019 ஆம் ஆண்டின் போது 200,000 காணி ஆவணங்களை உள்ளடக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டது 144,936 காணி ஆவணங்களின் தகவல்கள் மாத்திரமாகும். அதன் காரணமாக குத்தகையை அறவீடு செய்வது சம்பந்தமான தேவையான தகவல்களை இம்முறைமையிலிருந்து பெற்றுக் கொள்ளும் இயலுமையானது இருக்கவில்லை. | அரசாங்க காணிகளை முகாமைத்துவம் செய்வதற்காக தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான வகையில் அரசாங்க காணி முகாமைத்துவ முறைமை பேணப்படுதல் வேண்டும். | காணி தொடர்பான தரவு முறைமையைப் பேணுதல் மிகவும் சிக்கலான செயற்பாடாகும். பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் ஏனைய செயற்பாடுகளை மேற்கொள்கின்ற அதேவேளை காணிகள் சம்பந்தமான தரவுகளை உள்ளடக்குதலை மேற்கொள்வதனால் தாமதங்கள் ஏற்பட்டுள்ளது. பட்டதாரி பயிலுனர்களைச் சேர்த்துக் கொள்வதன் ஊடாக இரண்டாந்தர தரவுகளை உள்ளடக்குவதனை துரிதப்படுத்தி 02 ஆண்டுகளுக்குள் முடிவுறுத்துவதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) விவசாய அமைச்சுக்குச் சொந்தமான ஒரு காணியில் 2017 ஆம் ஆண்டின் போது 36.4 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட காணி ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லமானது நில மீட்பும் அபிவிருத்தி செய்தலும் மற்றும் சுற்றாடல் | காணியை பொறுப்பேற்பதன் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டிட திணைக்களத்தினூடாக நிலத்தை தயார்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை நிலத்தை பொறுப்பேற்பதற்குரிய சிபார்சு அறிக்கை திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரசபையின் முன் அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதனால் கட்டிடத்தைச் சுற்றி நீர் ஒன்று சேர்ந்திருப்பதன் காரணமாக 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. மேலும் இந்த உத்தியோகபூர்வ இல்லமானது நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தும் இதுவரை கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட காணி பொறுப்பேற்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க மற்றும் 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற வாகனங்கள் 2018 யூன் 30 ஆந் திகதி முன்னர் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், கைதவிர்ப்புச் செய்வதற்காகத் தீர்மானிக்கப்பட்ட 04 வாகனங்கள் 03 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 54-4013, 54-4012 மற்றும் KH-5694 ஆம் இலக்க 03 வாகனங்களைத் திருத்தம் செய்து செயற்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 32-3295, 32-1187 ஆம் இலக்க 02 வாகனங்களை ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அல்லது கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா விடுதியினைப் பேணுவதற்காக ஒரு தனியார் கம்பனிக்கு 2006 ஆம் ஆண்டின் போது 30 ஆண்டுகள் காலத்திற்காக நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள கண்டி கஹட்ட கோரலே பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 0.238 ஹெக்டயர் அரசாங்க காணி அக்குத்தகை தாரரினாலேயே 1995 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை 11 ஆண்டுகள் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டு வந்தது. அரசாங்க மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் அரசாங்கத்தினால் இழக்கப் பட்டுள்ள வருமானம் ரூபா 6,932,500 என்பது அவதானிக்கப்பட்டது. காணியின் உரிமை உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை எனக் காட்டி இந்த அதிகாரமற்ற பயன் படுத்துதல் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை களுக்கு முயற்சிகள் எடுக்காமையானது சச்சரவுத் தன்மையான விடயம் என அவதானிக்கப்பட்டது. | உரிய காலத்தில் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஹோட்டல் கம்பனி 1995 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தும் இக்காணி உடவத்தை வனத்திற்கு உரிமையானதா என்பது உறுதிப்படுத்தப் படாததன் காரணமாக கம்பனிக்கு காணியை வழங்குவது தாமதமடைந்துள்ளது. அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்ற திகதி குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியாகக் கருதப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கை இதுவரை கிடைக்காததன் காரணமாக நிர்ணயிக்கப்பட்டவாறு குத்தகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் 29.88 பேச்சஸ் அரசாங்க காணி 1999 ஆம் ஆண்டின் போது நீண்டகால குத்தகையின் அடிப்படையின் கீழ் | காணிகளை பயன்படுத்து வதற்கான உரிமை ஒப்படைக்கப்பட்ட உடன் செலுத்த வேண்டிய பணத்தை | குத்தகைக்கு வழங்கும் நடைமுறையின் போது சில நிறுவனங்கள் சம்பந்தப்படுவதனால் குறிப்பிடத்தக்க அளவான காலம் எடுக்கும் குத்தகை |

| | | | |
|---|---|---|---|
| | வரையறுக்கப்பட்ட சுயாதீன தொலைக்காட்சி சேவைக்கு வழங்கப்பட்டிருந்தும் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை தெரியப்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் எடுத்திருந்தது. மேலும் பயன்படுத்து வதற்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட திகதியிலிருந்து 10 ஆண்டுகள் காலம் எதுவித குத்தகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்ய வேண்டியுள்ள நிலுவைப் பணம் ரூபா 36,225,000 ஆகும். எவ்வாறாயினும், காணியை குத்தகைக்கு வழங்கும் போது சட்ட ரீதியான தன்மையை பாதுகாக்கும் வகையில் குத்தகைப் பத்திரம் வழங்கப்படாததன் காரணமாக குத்தகைப் பணம் செலுத்தப்படாமை சம்பந்தமாக குத்தகை தாரருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள முடியாதிருந்தது. | குத்தகைதாரருக்கு தெரியப்படுத்த வேண்டியதுடன் தாமதமின்றி உரிய குத்தகைதாரருடன் சட்டரீதியான உடன்படிக்கையை மேற்கொள்வதன் மூலம் நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலுத்தும் தாமதம் சம்பந்தமாக மாகாண காணி ஆணையாளர், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகம் மற்றும் குத்தகை தாரருடன் கலந்தாலோசிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. |
| (இ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் 1.163 ஹெக்டயர் (416 பேச்சஸ்) அரசாங்க காணி நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் 1956 ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்காக ஓடர்ஸ் எக்வடிக் கிளப் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் 17 ஆண்டுகள் காலம் குத்தகை உடன்படிக்கையின்றியும் | குத்தகை வழங்கப்படுகின்ற காணிகள் சம்பந்தமாக முறையான ஒரு பதிவேட்டினைப் பராமரித்து குத்தகைக் காலம் முடிவடைந்த உடன் காலத்தை நீடிக்க வேண்டியதுடன் சட்ட ரீதியான உடன்படிக்கையை மேற்கொள் | குத்தகை காலத்தை நீடிக்குமாறான வேண்டுதல் குத்தகைதாரரின் பொறுப்பாகும். குத்தகை உடன்படிக்கை காலத்தை நீடிப்பதற்காக உரிய குத்தகை சிபார்சு பிரதேச செயலாளரால் தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டது என தெரிவிக்கப்படுவதுடன் குத்தகைதாரர் நிறுவனத்துடன் கலந்தாலோசித்ததன் பின்னர் குத்தகைப் |

| | | | |
|---|---|---|---|
| | குத்தகைப் பணம் செலுத்தாமலும் உரிய காணி பயன்படுத்தப்பட்டு வந்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 28,411,250 குத்தகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் குத்தகைப் பத்திரம் வழங்கப்படாததன் காரணமாக குத்தகைப் பணத்தை செலுத்ததத் தவறியமை சம்பந்தமாக குத்தகைதாரருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் இயலுமை இருக்கவில்லை. குத்தகைப் பத்திரம் வழங்கப்படாமையானது சச்சரவுத் தன்மையான விடயமாக அவதானிக்கப்பட்டது. | வதனூடாக குத்தகைப் பணத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பணத்தை பகுதியாகச் செலுத்துவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் 01 ரூட் 17.5 பேச்சஸ் மற்றும் 01 ஏக்கர் 01 ரூட் 5.06 பேச்சஸ் அரசாங்க காணியை நீண்டகால குத்தகை அடிப்படையின் கீழ் முறையே 1977 நவம்பர் 30 ஆந் திகதி மற்றும் 1987 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்கு 80 சமூகப் பெயருள்ள விளையாட்டுச் சங்கங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக்கால இறுதியில் குத்தகை காலத்தை நீடித்தலும் இடம்பெற்றிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 23,686,320 குத்தகைப் பணம் நிலுவையாகக் காணப்பட்டிருந்தும் குத்தகைப் பத்திரம் வழங்கப்படாமையின் காரணமாக குத்தகைப் | சட்டரீதியான உடன்படிக்கையினை மேற்கொள் வதனூடாக குத்தகைப் பணத்தை சேகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | திம்பிரிகஸ்யாய போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற அரசாங்க காணிகளின் மிகை மதிப்பீட்டின் காரணமாக வருமானம் உழைக்கப்பட்டிருந்தும் வணிக அடிப்படையில் குத்தகைக்கு பெற்றுக் கொள்வதில் குத்தகை தாரர்கள் ஆர்வத்தைக் காட்டியிருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்நிலைமை தொடர்பாக உரிய நிறுவனத்திற்கு தெரியப்படுத்தி அரசாங்க வருமானத்திற்கு சாதனமான ஒரு கொள்கையை கலந்தாலோசித்து குத்தகையை அறவீடு செய்யும் நடைமுறையை மேலும் முறைமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து அறவிட வேண்டிய குத்தகைப் பணத்தை பகுதி பகுதியாகச் செலுத்தி முடிவுறுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| பணத்தை செலுத்தத் தவறியமை சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் இயலுமை காணப்பட்டவில்லை. குத்தகைப் பத்திரம் வழங்கப்படாமையானது சச்சரவுத் தன்மையான விடயமாக அவதானிக்கப்பட்டது. | | அனுமதி வழங்கப்படும். |

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் பதவிகளில் 315 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 05 காணி ஆணையாளர் பதவிகள் 113 குடியிருப்பு உத்தியோகத்தர் பதவிகள் 105 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் என்பன காணப்பட்டன. அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவது தடை ஏற்படலாம் என்பது அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தின் குறிக் கோள்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்கு தேவையான மனித வளங்கள் பூரணப் படுத்தப்படுதல் வேண்டும். | அனைத்து உத்தியோகத்தர்களும் அரசாங்க நிருவாக அமைச்சினால் ஆட்சேர்த்தல் செய்யப்படுவதுடன் அடிக்கடி வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தும் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 2/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவளங்களை அபிவிருத்தி செய்வதற்காக பதவியணியினர்களை ஈடுபடுத்தும் முறைமை தொடர்பாக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | மீளாய்வாண்டிற்கான மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்படவில்லை. |